# இயேசு யார்



# இயேசு யார்?

ஆக்கியோன்

இ. ஜி. ஹில்

உதாரணங்கள்

பால் எஸ். ட்ரிட்டின்

மொழி பெயர்ப்பு

பென்னி. டி. ஜெ.

Who Jesus Is

International Correspondence Institute
P. O. BOX 5036,
Bangalore-560 001

CL 3130-TL

## பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| | முதலாவதாக நாம் சற்று உரையாடுவோம் | 5 |
| 1. | இயேசுவை குறித்து ஆராயுதல் | 9 |
| 2. | இயேசு—வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா | 27 |
| 3. | இயேசு தேவனுடைய குமாரன் | 44 |
| 4. | இயேசு மனுஷ குமாரன் | 63 |
| 5. | வார்த்தையாகிய இயேசு | 85 |
| 6. | இயேசு உலகத்தின் ஒளி | 100 |
| 7. | இயேசு வைத்தியரும் அபிஷேககரும் | 116 |
| 8. | இரட்சகராகிய இயேசு | 131 |
| 9. | இயேசு-உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார் | 149 |
| 10. | இயேசு கிறிஸ்துவே கர்த்தர் (தேவன்) | 165 |

# முதலாவதாக நாம் சற்று உரையாடுவோம்



## நீங்கள் ஏன் இந்த பாடத்திட்டத்தை படிக்கிறீர்கள்?

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பிறந்த ஒரு வரைப்பற்றிய பாடத்திட்டத்தை நீங்கள் ஏன் படிக்க வேண்டும்? இயேசு எப்படிப்பட்டவராக உங்களுக்கு காணப் படுகிறார்? இது ஒரு முக்கியமான அல்லதுஇன்றியமையாத கேள்வியாகும். இப்பாடத்திட்டம் மூலம் இக்கேள்வியின் பதிலை நீங்கள் கண்டு கொள்ள வேண்டுமென்பதே எங்கள் நோக்கமும் ஜெபமுமாகும்.

இது வரை உலக சரித்திரத்தில் நடந்திராத விதத்தில் இன்று ஜனங்கள் இயேசுவை குறித்து பேசுகின்றனர். ஆயிரக்கணக்கானோர் இன்று தங்களை இயேசுவின் ஜனங்கள் எனக்கூறிக் கொள்கிறார்கள். மேலும் எண்ணிலடங்கா ஜனங்கள் தாங்கள் இயேசுவின் சீடர்கள் என உரிமைப் பாராட்டுகின்றனர். ஏன்? உங்கள் மதம் என்னவாக இருந்தாலும், இயேசுவைக் குறித்தும் அவருடைய வாழ்க்கை, அவருடைய உபதேசங்கள், மேலும் அவருடைய உரிமைகள் இவைகளை குறித்து அறியக் கடமை பட்டுள்ளீர்கள்.

ஒருவேளை இயேசுவை குறித்தும் அவருடைய உபதேசங்கள் அடங்கினதான இப்பாடத்திட்டத்தை படிப்பதின் நோக்கம் உங்கள் ஆர்வத்தை திருப்திபடுத்துவதாக இருக்கலாம். அல்லது அவரை உங்கள் சொந்த இரசட்கராக ஏற்று கொண்டு, பிறகு அவரைக் குறித்து மேலும் அறிய விருப்பமாக இருக்கலாம். உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை உண்மையுள்ளதாய் மாற்ற, விசுவாசத்தில் உறுதி பட அல்லது இயேசு, வாழ்க்கை பிரச்சனைகளுக்கு பதில் வைத்திருக்கிறாரோ என கண்டு கொள்வது தான் உங்கள் நோக்கமாக இருக்கலாம்.

எந்த நோக்கமாக இருந்தாலும் சரி, அந்நோக்கத்தை மனதில் வைத்து இப்பாடத்திட்டத்தை படியுங்கள். இப்பாடங்களை எவ்வாறு நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கு உபயோகப்படுத்துகிறீர்களோ அவ்வாறே இதிலுள்ள நன்மைகளையும் பெறமுடியும்.

## சுயமாக கற்றுக்கொள்ளல்

இப்புத்தமானது, நீங்கள் உங்களுக்கே கற்றுகொடுக்கும் நவீன முறையை உபயோகித்திருப்பதால் உண்மையாகவே இன்புறுவீர்கள். அது மட்டுமின்றி நீங்கள் உங்களுக்கு இலவசமாக கிடைக்கும் ஐந்து அல்லது பத்து நிமிடத்தில் கூட எடுத்து சென்று படிக்கும் விதத்தில் சிறு புத்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தில் அடங்கியுள்ளதான பொருள் முதலாவதாக இந்தியா மற்றும் இலங்கை நாடுகளில் எல்டன் ஜி. ஹில். என்பவரால் வானொலி செய்திகளாக தோன்றிற்று. அவை அந்நாடுகளிலும் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் விசாலமாக பரவினது மட்டுமல்லாமல் அநேகர் புகழவும் செய்தனர். இப்பொழுது **I. C. I.** அந்தச் செய்திகளை நீங்கள் உங்களுக்கே கற்று கொடுக்கும் முறையில் உருவாக்கியுள்ளது. நீங்கள் இயேசுவை குறித்தும் அவருடைய கிரியைகளை குறித்தும் முழுமையாக அறிந்துக் கொள்ளும்படி இன்னும் பல பாடங்கள் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

## பிரிவுகள் (பகுதிகள்)

ஒவ்வொரு பாடங்களும் பல பகுதிகளாக பிரிக்கபட்டுள்ளது. ஒரு பாடத்தை ஒரே தடவை முடிக்கும் தருணம் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே தடவை எது வரைக்கும் உங்களால் படிக்க இயலுமோ அது வரைக்கும் படித்து நிறுத்தும் விதத்தில் ஒவ்வொரு பகுதியிலும் அதற்குரிய கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளது. கேள்விகளுக்கு நீங்கள் விடை எழுதின பிறகு பாடத்தின் கடைசியில் கொடுக்கபட்டுள்ள

சரியான விடைகளை உங்கள் விடைகளோடு ஒப்பிட்டு பார்த்து நீங்களே தரம் செய்யலாம். உங்களால் இயன்ற அளவு எங்கு வேண்டுமென்றாலும் எப்பொழுதாகிலும் பூர்த்தி செய்யுங்கள். ஆனால் வாரத்திற்கு ஒரு பாடத்தை யாவது முடிக்க முயற்சி செய்யுங்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியது

ஒவ்வொரு பாடத்தின் கடைசி பகுதியில் கொடுக்கப் பட்டுள்ள கேள்விகள் மற்றும் மிக முக்கியமானவைகள்

அவைகள்:
* உங்கள் சிந்தனைகளை நேர்வழிபடுத்தும் (ஒருமுனை படுத்தும்)
* நீங்கள் படித்ததை எவ்வளவு புரிந்து கொண் டீர்கள் என அறியச்செய்யும்.
* பாடத்தின் முக்கிய பகுதிகளை உங்கள் மனதில் பதியச் செய்யும்.
* படித்தவைகள் தற்கால சந்தர்ப்பங்களிலும், சொந்த வாழ்க்கை பிரச்சனைகளின் மத்தியி லும் உபயோகிக்க உதவும்.

இப்புத்தகமானது நீங்கள் உபயோகிக்கும் முறையில் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் நீங்கள் கடனாக பெற்றிருந் தால் அல்லது மீண்டும் உபயோகிக்க வேண்டியதானால், உங்கள் விடைகளை வேறொரு புத்தகத்தில் எழுதவும். இல்லை யெனில், கோடிட்ட இடங்களை பூர்த்திச் செய்து அல்லது சரியான பதில்களை புத்தகத்தில் தானே குறிப்பிடவும்.

நீங்கள் கேள்விகளுக்கு எப்படி பதில் எழுத வேண்டும் என்பதற்காக கீழே ஒரு மாதிரி கொடுக்கப் பட்டுள்ளது. கேள்வியின் கீழ் பல 'சரி என தோன்றும்' பதில்கள் கொடுக் கப்பட்டுள்ளன. நாங்கள் இந்த மதிரி பரிசோதனையில் செய்துள்ளது போல நீங்களும் 'சரியான பதில்' எது என கண்டுபிடித்து அதற்கு நேராக '**X**' என்னும் குறி போடவும்.

1. இப்புத்தகம் எப்பேர்பட்டது ?

...**a**) வானொலிச் செய்திகள் அடங்கியது.

...b) இயேசுயார் என்பதை குறித்ததான தெய்வீக உபதேசங்கள் அடங்கியது.

X c) இயேசு யார் என்னும் வாஞெலிச்செய்திகளை கொண்ட சுய போதனை பாடங்கள் அடங்கியது.

## உங்கள் மாணவர் பதிவேடு

ஒவ்வொரு பாட்த்திற்கும் பூர்த்தி செய்ய கேள்விகள் அடங்கிய மாணவர் பதிவேடு கொடுக்கப் பட்டுள்ளது. நீங்கள் மனப்பாட பகுதிகளை எவ்வாறு மனப்பாடம் செய்துள்ளீர்கள் என்பதும், கேள்விகளுக்கு எவ்வாறு விடைகள் எழுதியுள்ளீர்கள் என்பதையும், உங்கள் பதிவேட்டில் உள்ளதான பதிலை கண்டு, நீங்கள் இப்பாடங்களை எவ்வாறு விளங்கி கொள்கிறீர்கள் என உங்கள் ஆசிரியர் அறிந்து கொள்ள உதவியாயிருக்கும். பாடங்களை குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகமிருப்பின் அதை உங்கள் ஆசிரியருக்கு தெரிய படுத்தவும். அவர் கூடுமானவரை உங்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருப்பார்.

இப்பாடப் பகுதியின் அழகான நற்சாட்சி பத்திரம் நீங்கள் பெற உங்கள் மாணவர் பதிவேட்டை சரியாக பூர்த்திச் செய்து எங்கள் அலுவலகத்திற்கு (I. C. I.) அனுப்பவும், எங்கள் விலாசம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

**I. C. I.**
**Post Box 5036**
**Bangalore-560 001**